

# தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்



தொகுப்பாசிரியர்

**ப.பிரதாப்**



"காலத்திற் கேற்ற வகைகள் அவ்வக்
காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்
ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த
நாளும் நிலைத்திடும் நூலொன்று மில்லை"

சுப்பிரமணிய பாரதியார்

ISBN 819379638-1
9 788193 796382

தமிழ் இலக்கியங்களில் காலமும் சூழலும்

(பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக்கோவை)

தொகுப்பாசிரியர்

ப. பிரதாப்

உரிமை

ஆசிரியருக்கே

முதற்பதிப்பு

அக்டோபர், 2019

வெளியீடு

தமிழ்த்துறை, என்.ஜி.எம். கல்லூரி, பொள்ளாச்சி

வடிவமைப்பு, அச்சு

பாலகீதா மீடியா, பொள்ளாச்சி, 99761 44451

பக்கங்கள் : 18 + 398 = 416

விலை: ரூ. 450/-

ISBN : ISBN 819379638-1

9788193796382

# 42. ஜோதிர்லதா கிரிஜா குறுநாவல்களில் சமுதாயச்சூழல்

**முனைவர் பா.அருள்ஜோதி**
தமிழ் உதவிப்பேராசிரியர்,
என்.ஜி.எம் கல்லூரி
பொள்ளாச்சி

சமுதாயம் என்பதற்குப் பல்வேறு அறிஞர்களும் பல்வேறுபட்ட கருத்துக்களை முன்மொழிகின்றனர். சமுதாயம் என்பதற்குக் கீழ்க்கண்டவாறு விளக்கம் தரப்பட்டிருக்கின்றது. 'சமுதாயம் என்றால் கூட்டம்' *(எஸ். அனவரதவினாயகம் பிள்ளை (பதி.), கழகத் தமிழ்க் கையகராதி, ப.157)*, 'சங்கம், திரள்' *(English Tamil Dictionary, p.407)*, 'சமூகம், மக்களின் திரள்' *(தமிழ் - லெக்சிகன், ப.130)* என்று அகராதிகள் பொருள் தருகின்றன.

மனிதக் குழுவின் கூட்டுத்தொகுதிதான் சமுதாயம் ஆகும். பல்வேறு தன்மைகள், சமுதாய உணர்ச்சிகள் ஆகியவை தாம் சமுதாயத்தின் பண்புகளாக மலர்ச்சி பெறுகின்றன. ஒவ்வொரு மனிதனும் மற்றவர்களுடன் பண்பட்ட நிலையில் கொண்டிருக்கிற சமூக உறவுமுறைத் தொடர்புகளைத் தான் சமுதாயம் என்ற ஒரே பெயரால் அழைக்கக் காண்கிறோம்.

## சமூகத் தோற்றம்

சமூகம் அல்லது சமுதாயத் தோற்றம் குறித்துப் பல்வேறு கருத்தமைவில் பேசப்படுகின்றது. "இதுநாள் வரையிலுமான சமுதாயங்களின் வரலாறு அனைத்தும் வர்க்கப் பேராட்டங்களது வரலாறேயாகும்" ***(சேலம் மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள், ப.35)*** என்பார் இந்திரசித்து அவர்கள்.

சமுதாய உணர்வு என்பது மனிதனுடைய தொடக்கம் முதலே தோன்றியது எனலாம். "சமூகவியல்பு மனிதனுடன் முதலிலேயே தோன்றிய ஒன்று ஆகும். ஏனையோருடன் அவன் முதலிலேயே சேர்ந்து வாழ முற்பட்டுவிட்டதனால், சமூகம் உடனேயே தோன்றிவிட்டது. ஒரு ஒப்பந்தத்தினாலோ வேறு

உடன்படிக்கையினாலோ பிறகு மனிதனுடன் சேர்க்கப்பட்ட ஒன்றல்ல சமூகம். அது தானாகவே தோன்றி இயல்பாகவே வளர்ந்த ஒன்று ஆகும்" (சமூகவியலின் அடிப்படைக் கோட்பாடுகள், மொ.ஆ., ப.92) என்று பாஸ்கல் கிஸ்பர்ட் கூறுவதாக, ஜெ.நாராயணன் அவர்கள் குறிப்பிடுகிறார்.

"தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும், தனது தேவைகளை நிறைவுசெய்து கொள்ளவும், மனிதனுக்குச் சமுதாய அமைப்பு உதவி செய்தது எனவும், இத்தகைய குழுவாழ்க்கை பகைவர்களாலும், விலங்குகளாலும், தீய ஆற்றல்களாலும் ஏற்படும் துன்பங்களிலிருந்து பாதுகாப்பளித்தது எனவும் இதற்கான காரணங்கள் வெளிப்படுகின்றன" **(சமூகவியல், பக்.9,10)** என்கிறார் இரா.கல்பனா.

**சமுதாயமும் தனிமனிதனும்**

தனிமனிதர்கள் அடங்கிய கூட்டமே சமுதாயம் ஆகும். தனித்தனி மனிதர்கள் இல்லாமல் சமுதாயம் இருக்க முடியாது. ஒரு தனிமனிதன் குடும்பம் சார்ந்து பின் சமூகத்தில் பங்கு கொள்ள வரும்போது அவன் சமூக சார்ந்த மனிதனாகின்றான். இதனால் சமூகத்தில் சில கோட்பாடுகளும் உருவாக்கப்படுகின்றன. அதன் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு, அக்கோட்பாட்டினை ஒட்டியே மனிதர்களின் வாழ்வும் அமைகிறது.

"ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன் கொண்டிருக்கின்ற சமூக உறவுமுறைத் தொடர்புகளைத் தான் சமூகம் என்பர்" **(பிரதிபா இராசகோபாலன் புனைகதை இலக்கியம் - ஓர் ஆய்வு, ப.7)** என்கிறார் மா.நடராசன் அவர்கள்.

பொதுவாக, மனிதனை ஒரு சமூகப்பிராணி என்பர். இதனை "இனம், குலம், குடும்பம், சமுதாயம், இதர சமூகப் பிரிவுகள் ஆகிய மக்கட் குழுக்களில் ஒருவனாகவே மனிதன் இருக்கிறான். அதனாலேயே அவனை ஒரு சமூகப் பிராணி என்றழைக்கிறோம்" **(நமது சமூகம், ப.11)** என்கிறார் சொ.இலக்குமிரதன் பாரதி.

மேற்கூறிய காரணங்களினால் தனிமனிதன் சமூக அமைப்பின்றி தனிமனிதனாக வாழ முடியாது எனலாம். தன்னுடைய தேவைகளுக்காகவும், பாதுகாப்பிற்காகவும், சக்திக்காகவும், நலத்திற்காகவும், வாழ்க்கை வசதிக்காகவும், பிற தேவைகளுக்காகவும் ஏனைய மனிதர்களோடு சேர்ந்து கூட வாழ வேண்டிய கட்டாயம் அவனுக்கு இருக்கிறது என்பதையும் மறுப்பதற்கில்லை.

சங்க காலந்தொட்டே சமுதாய முன்னேற்றத்திற்கு இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன. இலக்கியங்கள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பதோடு, சமுதாயத்திற்கெதிரான தீயசக்திகளை அழிக்கும் அருமருந்தாகின்றன.

## சமுதாய அமைப்பும், நெறிப் பறழ்வு நிலையும்

(Social Structure and Anomie)

"ஒவ்வொரு சமுதாயத்திலும், பொதுவாகப் பலராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட சில குறிக்கோள்களும் (Cultural Goals) அவற்றை அடையக் குறிப்பிட்ட சில வழிமுறைகளும் (Institutionalised means) வகுக்கப்பட்டிருக்கும். குறிக்கோள்களும், வழிமுறைகளும் சமமாக வலியுறுத்தப்பட்டால், மக்கள் இரண்டையும் ஏற்றுக்கொண்டு 'கீழ்ப்படிதல்' (Confirmly) என்ற சமநிலையில் இருப்பர். ஆனால், இது நடைமுறையில் இயலுவதன்று. குறிக்கோள்கள் அல்லது வழிமுறைகள் இரண்டனுள் ஒன்று மிகுதியாக வலியுறுத்தப்பட்டால் சமநிலை மாறும்" **(வாழ்வியற் களஞ்சியம், தொ.2, பக். 642, 643)** என்பது கவனத்திற்குரியது.

மேற்கூறிய கருத்திலிருந்து, சமுதாயத்தால் வலியுறுத்தப்படக் கூடிய கருத்துக்கள் ஒருதலைப்பட்சமாக இருந்தால் அவற்றை நடைமுறைக்குக் கொண்டு வருவது இயலாது என்பது தெளிவுறுத்தப்படுகிறது.

## கற்புச் சோதனை

பழங்கால இலக்கியங்களின் வாயிலாகக் கற்பு என்பது பெண்களுக்கு மட்டுமே உரியதாக விதிக்கப்பட்டுள்ளது

என்பதையும் அறிய முடிகிறது. இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களும் இதைப் பறைசாற்றுகின்றன. அன்று ராமன் சீதையைப் பார்த்துக் கற்புநெறியைச் சோதிப்பதற்காகத் தீக்குளிக்க வேண்டும் என்பதும், கௌதம முனிவர் அகலிகையைக் கற்பு இழந்து விட்டதாகக் கூறிக் கல்லாக மாறச் சாபம் கொடுத்தார் என்பதும் இதற்குச் சான்று பகர்வதாய் அமைகின்றன.

## சாதிப் பாகுபாடு

சாதிப் பாகுபாடு என்பது காலந்தோறும் இருந்து கொண்டுதான் இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. "இந்திய மக்கள் சாதிகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஒரே சாதியர் வேறுவேறு வட்டத்தில் வாழும்போது அவர்களைக் கூட வேறுவேறு சாதியினராகவே பாவித்துக் கொள்கின்றனர். ஒரே சாதியின் உட்பிரிவுகளும் கூட தனிச் சாதிகளாகவே கருதப்படுகின்றன. எனவே, ஒரு சாதிக்குள் நடக்கும் திருமணத்தைக் கூடக் கலப்புமணம்தான்" (*Social Change in Novel, p.157*) என்பார் பி.கருப்புச்சாமி அவர்கள். இத்தகைய கலப்புமணத்தைப் பெற்றோர்கள் விரும்புவதுமில்லை, ஏற்றுக் கொள்வதுமில்லை.

சாதியத்தின் பிடியில் சிக்கிச் சுழன்ற சமுதாயத்தை அதன் கோரப் பிடியிலிருந்து விடுவிக்க பாரதியார் விழைந்தார். ஏகாதிபத்தியத்தைப் பாரதி எந்த அளவுக்கு வெறுத்தாரோ அந்த அளவுக்குச் சாதிப்பாகுபாடுகளையும் வெறுத்தார்.

"சூத்திரனுக்கொரு நீதி — தண்டச்
சோறுண்ணும் பார்ப்புக்கு வேறொரு நீதி
சாத்திரம் சொல்லிடுமாயின் - அது
சாத்திரம் அன்று சதியென்று கண்டோம்"

(பாரதியார் கவிதைகள், 'புதிய பாடல்கள், ஸ்மிருதிகள்', ப. 466)

என்று கடுமையாகச் சாடியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. மேலும், சிறுவயதிலேயே அதைப் புரிந்துகொண்டு கிள்ளி எறிய வேண்டும் என்ற நோக்கில் இளம் சிறார்களுக்கும்,

"சாதிகள் இல்லையடி பாப்பா
குலத் தாழ்ச்சி உயர்வு சொல்லல் பாவம்"
(பாரதியார் கவிதைகள், பாப்பா பாட்டு, பா. 15)

என்றார் பார்ப்பனியச் சமூகத்தில் உதித்த அந்த உத்தமக் கவிஞர்.

## இலக்கியங்களில் இனவுணர்ச்சி

தற்காலத்தில் தோன்றிய தேசிய இலக்கியங்களிலே வருணாசிரம முறை என்பது அடியோடு புறக்கணிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் ஆழமாக வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

"ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம்இத் தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே — அன்றி
வேறுகுலத்தின ராயினும் ஒன்றே
எல்லாரும் ஓர் குலம்
எல்லாரும் ஓர் இனம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை
எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் — நாம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர் — ஆம்
எல்லாரும் இந்நாட்டு மன்னர்"
(பாரதியார் கவிதைகள், 'பாரத சமுதாயம்', பா. 4)

என்னும் பாடல்களிலே பாரத சமுதாயத்தின் சமத்துவத்தைப் பாரதியார் வற்புறுத்திப் பாடியுள்ளதை இதற்குச் சான்றாகச் சுட்டலாம்.

சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை காதல் நிறைவேறத் தடைவரின், தலைவன் தலைவியைத் தன் ஊருக்கு அழைத்துச் சென்று மணம் முடித்துக் கொள்வது (உடன்போக்கு) பண்டையத் தமிழ் வழக்கமாக இருந்தது. அது உயர்ந்த நெறியாகவும் அக்காலத்தில் கருதப்பட்டது. இதனைத் தொல்காப்பியரும்,

"கொடுப்போர் இன்றியுங் காரண முண்டே

புணர்ந்துடன் போகிற காலையான'' (தொல். கற். நூ. 2)

என்பார். ஆனால் நடைமுறையில் காதலர்களே இவ்வாறு உடன்போக்குச் செல்வதை விரும்புவதில்லை. பெற்றோரிடம் போராடி வெற்றி பெற வேண்டும் என்று நினைக்கின்றனர். ஆனால், சாதியெனும் பற்றை மீறி வெறிகொண்டு பத்துப் படித்தவர்கள் அவ்வாறு ஏற்படும் காதலை ஏற்பதும் இல்லை என்பதை '**இன்னொரு தேவதாஸ்**' எனும் கதை வாயிலாக ஆசிரியர் விளக்குகிறார்.

வேகவதி தன் வீட்டில் கீழ்வகுப்பைச் சேர்ந்த டிரைவராகப் பணிபுரியும் ராமதாஸ் என்பவரைக் காதலிக்கிறாள். ஆனால், ராமதாஸ் இது நடைமுறை வாழ்க்கைக்கு ஒத்துவராது எனக் கூறி மறுக்கிறான். எனினும் வேகவதி அப்பாவிடம் இது பற்றித் துணிந்து பேசி சம்மதம் பெறுவதாகக் கூறுகிறாள். "*என்னை யாராலெயும் அசைக்க முடியாது மிஸ்டர் ராமதாஸ்! அப்பாவுடைய பங்களா, பணம், காசு எதுவும் எனக்கு ஒரு பொருட்டில்லே, எல்லாம் எனக்குத் தூசி மாதிரி*' *(ப.218)* என்கிறாள். வேகவதியின் பேச்சில் மயங்கிய ராமதாஸும் அவளைக் காதலிக்கிறான். ஆனால், வீராச்சாமி ராமதாஸின் சாதியைக் காரணம் காட்டி அதனை மறுப்பவராக "*சீச்சி! வாயை மூடிக்கக் கழுதை! ஒரு கீழ்ச்சாதிப் பயலைக் கட்டிக்கிட்டா நம்ம சாதி சனங்கள்ளாம் எம் மேலே காறியில்லே துப்புவாங்க?*" *(ப.221)* என வேகவதியைத் திட்டுகிறார். மேலும், "*சாதிப் பத்துப் படித்த அவர் மனம் அருவருப்பால் நிறைந்தது. அந்த நினைப்பை — ஊரார் அங்கீகரித்தாலும் கூட — அவரால் ஏற்க முடியவில்லை. அவருடைய பரம்பரை என்ன, குலமென்ன, கோத்திரமென்ன? அந்தஸ்து தான் என்ன? அவர் மகள் - ஒரே மகள் - தீண்டத் தகாதவனை மணப்பதாவது? அதைத் தடுத்தே தீரவேண்டும்*" *(ப.222)* என அவர் நினைப்பதாக ஆசிரியர் கூறுகிறார். இறுதியில் அவர் வேகவதியின் காதலை மறுத்து அவளை வேறொருவனுக்கு மணம் முடித்து வைக்கிறார்.

இக்கதையின் வாயிலாகச் சமுதாயத்திலுள்ள சாதிப் பாகுபாடுகளை வேரோடு களையப் பல்வேறு கவிஞர்களும்,

எழுத்தாளர்களும் போராடியுள்ளனர். எனினும் இன்றளவும் அவற்றை ஒருசில மக்களின் மனத்தில் இருந்து நீக்க முடியவில்லை என்பதை இந்தக் குறுநாவல் மூலம் ஆசிரியர் அறிவுறுத்தியுள்ளார்.

## தீண்டாமைச் சாதிகள் என்ற மனிதப் பாகுப்பாடு

ஒரு சமூகம் பலம் வாய்ந்த ஒன்றாக இருப்பது மிகவும் நல்லதுதான். ஆனால், அந்தச் சமூகம் நியாயத்தின் அடிப்படையில் இயங்கும் பலம் வாய்ந்ததாக இருந்தால் அன்றோ நாட்டுக்கும், மனிதர்களுக்கும் நல்லது. அநியாயங்களை மனிதர்களுக்கு இழைக்கிற சமூகம் தன் செயலில் பலம் பொருந்தியதாக இருப்பதுதான் கொடுமை. சாதி, மதம் என்று வழிவழியாக வந்த கருத்துக்கள் இங்கே மனிதர்களின் இரத்தத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றது என்பதைப் ‘பட்டிக்காட்டில் பூத்த காதல்’, ‘காதல் முன்னோடிகள்’ என்ற குறுநாவல்கள் வாயிலாக எடுத்துக்காட்டியுள்ளார்.

மனிதனை மேம்படுத்துவதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சிகளில் மதமும் ஒன்று. ஆனால், அதுவே கொடிய அநாகரிக வழக்கங்களை வளர்க்கவும், மக்களை வதைக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

மேலும், கலப்பு மணத்தை ஊக்குவித்தும் சாதிக் கொடுமைகளை எதிர்த்தும் எவ்வளவு அற உரைகள், அறிவுரைகள் வழங்கினாலும் அவை சிலருடைய மனங்களில் கொள்கையளவிலான ஒப்புதலை ஏற்படுத்துமே தவிர நடைமுறையில் அக்கொள்கைகளைச் செயல்படுத்துவதற்குப் புரட்சி மனப்பான்மை தேவை என்பதை ஆசிரியர் மிக ஆணித்தரமாகவும் தெளிவாகவும் விளக்கியுள்ளார் என்பதை மறுப்பதற்கில்லை.

## முடிவுரை

ஜோதிர்லதாகிரிஜா குறுநாவல்களில் சாதி, மத, ஆண், பெண் பாகுபாடு, பாலியல் கொடுமைகள் போன்ற பல்வேறு சமுதாயச் சூழல்களால் நிறைந்துள்ள பாங்கினைக் காணமுடிகிறது.